புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் 2005
எவ்வாறு இச்சட்டம் பாதிக்கிறது : வேலை கொடுப்பவரை மற்றும் ஊழியர்களை

## அடிப்படைகள்

- புகை-அற்ற ஒன்டேரியோ சட்டம் (SFOA) மே 31, 2006 அன்று அமலுக்கு வருகிறது.
- இச்சட்டம் ஒன்டேரியோவின் தொழிலாளர்களையும், பொது மக்களையும் மறைமுகப் புகையின் (Second-hand smoke) இடர்களிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு, உள்ளடக்கப்பட்ட வேலையிடங்கள் மற்றும் உள்ளடக்கப்பட்ட பொது இடங்களில் புகை பிடித்தலை தடை செய்கிறது.

## உள்ளடக்கப்பட்ட பணியிடங்கள்

உள்ளடக்கப்பட்ட பணியிடங்களில், மறைமுகப் புகையிலிருந்து ஊழியர்களைப் பாதுகாக்க இச்சட்டம் விழைகிறது. உள்ளடக்கப்பட்ட பணியிடம் என்பது ஊழியர்கள் வேலை புரியும் இடம் அல்லது ஊழியர்கள் பணி காலத்தின் பொழுது, ஊழியர்கள் அடிக்கடி செல்லுமிடம் (தங்கள் வேலையின் பொழுது அவர்கள் சென்றாலும், செல்லாவிட்டாலும்) மற்றும் கழிப்பிடங்கள், முன்கூடங்கள் மற்றும் பார்க்கிங் காரேஜுகள், போன்ற பொதுவான பகுதிகளைக் கொண்ட இடமாக விவரிக்கப்படுகிறது. கட்டுமான தளத்தில் உள்ள ட்றேய்லர் ஆபீசுகள், சரக்கேறும் கலத்துறையின் உட்புறம் அல்லது டெலிவரி ட்ரக்கின் உட்புறம் போன்றவை உள்ளடக்கப்பட்ட பணியிடங்களின் உதாரணங்களாகும். வேலைபுரியாத, வேலை நேரத்துக்கு அப்பாற்ப்பட்ட நேரங்களிலும்கூட இவ்விடங்களில் புகைபிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

## மற்ற பிற இடங்கள்-குறிப்பாக ஒதுக்கப்பட்ட புகைபிடிப்பு அறைகள், புகைபிடிப்பு புகலிடங்கள், சிற்றுண்டிச் சாலைகள், பாடியோக்கள்

உள்ளூர் நகராட்சி துணைச் சட்டங்களின் கீழ் சில சந்தர்ப்பங்களில் அனுமதிக்கப்பட்டருந்த குறிப்பாக ஒதுக்கப்பட்ட புகைபிடிப்பு அறைகள் (DSRs), இப்பொழுது தடை செய்யப்பட்டுள்ளன.

தன்னிடம் பணிபுரியும் புகை பிடிக்கும் ஊழியர்களுக்கு புகைப்பிடிப்பு புகலிடம் ஒன்றை பணியிடம் வெளியே எஜமானர் ஒருவர் அமைத்துக் கொடுக்கலாம். வெளிப்பக்கத்தில் புகை பிடிப்பு புகலிடம் ஒன்றை அமைத்துக் கொடுக்கும் எஜமானர், புகை பிடிப்பு புகலிடத்தில்

இரண்டு சுவர்களும், ஒரு கூரையும் தவிர வேறு எதுவு மில்லாமலிருப்பதை உறுதிபடுத்த வேண்டும்.

பணியிடங்களில் உள்ள கே∴ப்டீரியாக்கள் உணவு விடுதியாகவே கருதப்படுகிறது. இங்கு உணவு அல்லது பானங்கள் பரிமாறவோ, விற்கவோ அல்லது வழங்கவோபடுகிறது. கே∴ப்டீரியா அல்லது உண்ணும் பகுதிக்கு அருகேயோ அல்லது அதன் பகுதியாகவோ உள்ள பேடியோ சம்பந்தமான புகைபிடித்தல் தடைகளுக்கும் கீழே பட்டியலிடப்பட்டுள்ள வேலை கொடுப்பவர் தேவைகளுக்கும் அவை இணங்கி நடக்க வேண்டும்.

பேடியோவில் மேற்கூரை இருந்தாலோ, அல்லது அதன் ஒரு பகுதியை மட்டுமேகூட கூரை மறைத்தாலோ, புகை பிடித்தல் தடை செய்யப்படுகிறது. மழை அல்லது காற்றோட்டம் அல்லது இரண்டையுமே தடுக்கும் திறன் படைத்த நிழர்கூரை (ஆணிங்க்), தார்பாலின், கேன்வஸ் தாள் அல்லது மற்ற பிற நிரந்தர அல்லது தற்காலிக மறைப்புக்கள் ஆகியவை மேற்கூரை எனப்படுகின்றன. தனி ஒரு மேஜையை மரைக்கும் தனியாக நிறுத்தப்பட்டிருக்கும் மேற்கூரையாக கருதப்படாது. எனினும் குடைகளை மேற்கூரையாக வேலை புரியும் வகையில் உபயோகித்தால் சோதனையாளர் அதை மேற்கூரையாக கருதலாம், அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கலாம்.

## வேலைக் கொடுக்கும் எஜமானர்களின் கடமைப்பொருப்புகள்

ஒவ்வொரு எஜமானரும் :

- உள்ளடங்கிய பணியிடங்களில் புகை பிடித்தல் தடை செய்யப் பட்டுள்ளதை ஊழியர்கள் அறிந்துள்ளனரா என்பதை உறுதிபடுத்திக் கொள்ளவேண்டும்.
- சாம்பல் கிண்ணங்களையும் மற்றும் சாம்பல் கிண்ணங்களாக உபயோகிக்கப்படுபவற்றையும் அப்புறப்படுத்த வேண்டும்.
- பணியிடத்தில் யாரும் புகை பிடிக்காததை உறுதி படுத்த வேண்டும்.
- இவற்றுடன் இணங்காத எந்த ஒரு தொழிலாளியும் உள்ளடக்கப்பட்ட பணியிடத்தில் தொடர்ந்து நீடித்து இல்லாமலிருப்பதை உறுதி படுத்த வேண்டும்.
- *நோ ஸ்மோகிங் (புகை பிடிக்கக்கூடாது)* குறிகளை அனைத்து நுழைவு வாயில்கள், வெளியேறும் வழிகள், கழிப்பிடங்கள் மற்றும் மற்ற பிற பொருத்தமான இடங்களில், புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளதை அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்கவும். தேவையான அடையாளக் குறிகளைப் பெறுவது குறித்த தகவலுக்கென, தயவுசெய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

### ஊழியர்கள்

ஊழியர் என்பவர் :

- எஜமானருக்காக எந்த ஒரு வேலையையும் செய்பவர் அல்லது எந்த ஒரு சேவையையும் வழங்குபவர்.
- எஜமானரின் வியாபாரம் அல்லது தொழிலில் எந்த ஒரு கட்டளை அல்லது பயிற்சியையும் பெறுபவர்.

## ஊழியர்களுக்கான பாதுகாப்பு

- சட்டத்துக்குப் பணிந்து அல்லது இணங்கிப் போகும் தனது ஒரு ஊழியரை எஜமானர் வேலையிலிருந்து நீக்கவோ, நீக்கப் போவதாக பயமுறுத்தவோ, கட்டுப்படுத்தவோ, தற்காலிகமாக நீக்கவோ, தண்டிக்கவோ, அச்சுறுத்தவோ அல்லது கட்டாயப் படுத்தவோ முடியாது.
- ஊழியர் ஒருவர் தனது எஜமானரிடமிருந்து மேலே கூறப்பட்ட எந்த ஒரு செயலையாவது அனுபவிக்க நேரிட்டால், ஒன்டேரியோ தொழிலாளர் தொடர்பு வாரியத்திடம் நேரிடையாகப் புகார் செய்யலாம்.

புகார் ஒன்றைத் தாக்கல் செய்வது தொடர்பான கூடுதல் தகவல்களுக்கென, தயவு செய்து தொழில் அமைச்சகத்தை தொடர்பு கொள்ளவும :

- 877-339-3335 (ஒன்டேரியோவில் மட்டும் கட்டணமின்றி)
- 416-326-7500 டோரண்டோவில்

அல்லது தொழில் அமைச்சகத்தின் வலையகமான www.labour.gov.on.ca./english/hs/faq_3.html–க்கு வருகை தரவும்.

## அமலாக்கம்

உள்ளூர் அரசு பிரிவுகள், சட்டத்தை அமல் படுத்தும் பொருட்டு, புகையிலை வியாபாரியின் சில்லறைக் கடைகள் தொடர்பாக சோதனைகளை நடத்துவதுடன் குற்றச் சாட்டுகளையும் விசாரிக்கும்.

## அபராதங்கள்

தனி நபர் ஒருவருக்கு, முதல் குற்றத்திற்கென உயர்ந்தபட்ச அபராதமாக $4,000 மற்றும் மூன்றாவது மற்றும் அதற்கும் மேற்பட்ட குற்றங்களுக்கென $100,000 உயர்ந்தபட்ச அபராதமாக விதிக்கப்படும். கம்பனிகள், முதல் குற்றத்திக்கு $10,000 மற்றும் மூன்றாவது அல்லது அதற்கும் மேற்பட்ட குற்றங்களுக்கு உயர்ந்த பட்சமாக $1,50,000 அபராதம் விதிக்கப்படும்.



Ontario

இந்த தகவல் தாளை ஒரு விரைவு நோக்கீட்டு உபயோகத்திற்கென மட்டுமே பயன் படுத்த பரிந்துரைக்கப் படுகிறது. கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து உங்கள் உள்ளூர் அரசு சுகாதாரப் பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

கட்டணமற்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டும்  நீங்கள் தகவல் பெறலாம்.

- **INFOline** 1-866-396-1760
- **TTY** 1-800-387-5559

வேலை நேரம் : திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை.

புகை அற்ற ஒன்டேரியோ சட்டம் பற்றிய கூடுதல் தகவலுக்கென, தயவு செய்து சுகாதார முன்னேற்றத்திற்கான ஒன்டேரியோ அமைச்சக வலையகத்திற்கு வருகை தாருங்கள்: http://www.mhp.gov.on.ca/english/health/smoke_free/legislation.asp.

மே 2006



Ontario